**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 234/2019**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 29.10.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : லெனின் Father's Name : முனிய படையாட்சி

துவக்க நேரம் **: 12.40 P.M**

சாட்சி முன்னிலையானார் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

1. வழக்கு சொத்தின் பரப்பளவு குறிப்பிட்டு என்னவென்று தெரியாது என்றால் நான் ஏற்கனவே சொன்ன நீள, அகலத்தில் உள்ளது. குறிப்பாக இவ்வளவு என்று சொல்ல முடியாது. தாவா சொத்தின் கிழபுறம் யாருடைய வீடு உள்ளது என்றால் சுசீலா வீடும் பழனிமுத்து படையாட்சி வீடும் உள்ளது.

2. இந்த சொத்தின் வடபுறம் வாதி சுசீலாவின் வீடு உள்ளது என்றால் சரிதான். சுசீலா வீட்டின் நீளம், அகலம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் தென்புறம் யாருடைய வீடு உள்ளது என்றால் வெங்கடாஜலம், ஜெயராமனிடம் விற்ற இடம் உள்ளது. அந்த இடத்தின் நீளம், அகலம் தெரியுமா என்றால் தெரியாது. ஜெயராமனிடம்

விற்ற இடத்திலும், அந்த தாவா சொத்தின் தென்பகுதியிலும் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கடக்கால் போடப்பட்டுள்ளது என்றால் இல்லை, 10, 12 வருடத்திற்கு முன்பு கடக்கால் போடப்பட்டுள்ளது.

3. தாவா சொத்தில் கடக்கால் போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம், பாகப்பிரச்சனை வந்ததால் நின்றுவிட்டது. நான் தாவா சொத்தில் 5 பாகம் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், யார் யாருக்கு உள்ளது என்றால் 1. மூக்கப்படையாட்சி, 2. ராமசாமி படையாட்சி, 3. கிருஷ்ணபடையாட்சி, 4. பொன்னுசாமி படையாட்சி, 5. அழகப்படையாட்சி ஆகியோருக்கு பாகம் உள்ளதாக சொல்லியுள்ளேன்.

4. மேற்படி 5 நபர்களுக்கு பாகம் உள்ளது என நான் பதிவு செய்யப்பட்ட ஆவணம் அல்லது வருவாய் துறை ஆவணம் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 5 பேர்களுக்கு பாகம் இருப்பதாக எனக்கு எப்படி தெரியும் என்றால் 1970-1974 காலகட்டத்தில் தாவா சொத்தை ஒட்டி கூரை வீடு இருந்தது, வெங்கடாஜலம் தற்காலிகமாக ஒரு 6 மாதம் கிளை அஞ்சல் அதிகாரியாக அந்த கூரை வீட்டை அஞ்சலகமாக வைத்து பணிபுரிந்து வந்தார். அந்த காலகட்டத்தில் நான் தபால்காரராக பணிபுரிந்து வந்தேன். அதனால் அந்த இடம் எனக்கு நன்றாக தெரியும்.

5. 5 நபர்களுக்கு பாத்தியம் என எனக்கு சுசீலா சொல்லித்தான் தெரியும் என்றால் ஆமாம். அதில் வாங்கிய பாகமும் எனக்கு தெரியும். தாவா சொத்தை சுசீலா வாங்கிய வருடம் எனக்கு தெரியுமா என்றால் 1978-ல் வாங்கினார். சுசீலா வாங்கிய கிரயப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து சம்மந்தமான வருவாய் துறை ஆவணங்களையாவது பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

6. வருவாய் துறை ஆவணங்களின்படி வாதிக்கு 1/3 பாகம் மட்டும்தான் சேரவேண்டியது என்றால் சரியல்ல, 5 பாகத்தில் சுசீலா 3 பாகம் வாங்கியுள்ளார், எப்படி அவருக்கு 1/3 பாகம் வரும். சுசீலா 3/5 பங்கு வாங்கியதாக எனக்கு யார் சொன்னது

என்றால் சுசீலா சொன்னார், அக்கம்பக்கத்தினர் சொன்னார்கள்.

7. வெங்டாஜலத்திற்கு சொந்தமான சொத்தில் கடந்த 30 வருடங்களுக்கு முன்பே வெங்கடாஜலம் கடக்கால் போட்டு பின்னிட்டு அந்த சொத்தையும் தாவா சொத்தில் 1/3 பாக சொத்தையும் ஜெயராமனுக்கு சமீபத்தில் விற்றுவிட்டார் என்றாலும் சரியல்ல. மணியின் தந்தையார் மருதமுத்து 1/3 பாக சொத்தில் கடக்கால் போட்டுள்ளார் என்றால் கடக்கால் போட்டுள்ளார்.

8. மேற்படி வெங்கடாஜலத்திற்கும் மருதமுத்துவிற்கும் 2/3 பாக சொத்து அடைந்துவிட்டதால் சுசீலாவிற்கு 1/3 பாக சொத்துதான் அங்கு உள்ளது என்றால் சரியல்ல. சுசீலாவிற்கு 3/5 பாகம் வரவேண்டும். 3/5 பாகம் சுசீலாவிற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும், சுசீலா சொல்லிக்கொடுத்ததன் பேரில் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. வெங்கடாஜலம் அவரது சொத்தை ஜெயராமனிடம் கொடுத்து தற்பொழுது ஜெராமன் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை பயன்படுத்தாமல் கிடக்கிறது. ஜெயராமன் கிரயம் பெற்றதிலிருந்து ஜெயராமன் அனுபவித்து வருகிறார் என்றாலும் அதனை மறைத்து வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

4-ஆம் பிரதிவாதி, மேற்படி 1 முதல் 3 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறார். 5-ஆம் பிரதிவாதி, வா.சா.1-ன் குறுக்கு விசாரணையை இந்த

சாட்சியில் குறுக்கு விசாரணையாக பாவிக்க வேண்டப்பட்டது, அவ்வாறே ஏற்கப்படுகின்றது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.16 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-S.Munusamy
Additional Distrit Munsif(F.A.C), Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S.234/2019 No. , Dt.29.10.2024.